-

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No.45/2022**

Prosecution witness : 1

| | | | |
|---|---|---|---|
| Name: | அன்னராணி | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Accused present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 22.09.2025

**முதல் விசாரணை**:

நான் தற்போது திருப்பரங்குன்றம் குற்றப்பிரிவு காவல்நிலையத்தில் தற்போது தலைமைக்காவலராக பணியில் உள்ளேன். கடந்த 2018ம் வருடம் தெப்பக்குளம் காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது 23.06.2018ம் தேதி காவல் ஆய்வாளர் திரு.நாகராஜ் அவர்கள் போதைப்பொருள் தடுப்பு சம்பந்தமாக ரகசிய தகவல் கிடைத்தது சம்பந்தமாக சார்பு ஆய்வாளர்-திருமதி.குமாரி, 1052-திருமதி, சத்தியபிரியா மற்றும் நானும் ரோந்து சென்றபோது சௌராஷ்டிரா ஆண்கள் மேல்நிலை பள்ளியின் பின்புறம் வந்துகொண்டிருநதபோது அங்கு நின்றுகொண்டிருந்த எதிரி-ஜெயராணியிடம் காவல் ஆய்வாளர் அவரை பற்றி அறிமுகம் செய்துகொண்டு, எதிரியிடம் போதைப்பொருள் இருப்பதாக தகவல் உள்ளது என கூறினார். முதலில் முன்னுக்குபிறனாக கூறி பின்னர் தன் பெயர் ஜெயராணி, வயது 40, க/பெ.முனியாண்டி,சீனிவாசபெருமாள் கோவில் தெரு, முனிச்சாலை, மதுரை என கூறினார். காவல் ஆய்வாளர் உங்களை சோதனை செய்யவேண்டும் நீங்கள் விரும்பினால் நீதித்துறை நடுவரிடமோ அல்லது அரசு பதிவு

பெற்ற அலுவலர் முன்பாகவோ சோதனை செய்ய உங்களுக்கு உரிமை உள்ளது என கூறினார். அதற்கு எதிரி-ஜெயராணி அங்கெல்லாம் செல்லவேண்டாம் தாங்களே சோதனை செய்துகொள்ளலாம் என்று கூறினார். காவல் ஆய்வாளர் சோதனை சம்மத கடிதம் அங்கேயே தயார் செய்தார். அந்த சோதனை சம்மத கடிதத்தில் எதிரி-ஜெயராணி, காவல்ஆய்வாளர்-சத்தியபிரியாவும், நானும் 8.55 மணிக்கு கையொப்பம் செய்தோம். எதிரியை சோதனை செய்ய கேட்டபோது கையில் இருந்த மஞ்சள் பையை எடுத்து ஒப்படைத்தார். ஆய்வாளர் அதை வாங்கி திறந்து பார்த்தபோது அதில் 1கிலோ300கிராம் கஞ்சா என்ற போதைப்பொருள் இருந்தது. பக்கத்தில் இருந்த கடையில் தராசு வாங்கி எடைபோட்டோம். ஆய்வாளர் எதிரியை கைது செய்வதாக தெரிவித்து அவரிடம் வாங்கிய கஞ்சா 1கிலோ300 கிராம் மற்றும் ரூ.300/- இருந்தது. அந்த கஞ்சாவிலிருந்து பரிசோதனைக்காக 50கிராம் 50கிராம் தனித்தனியே காக்கி கவரில் போட்டு S1, S2 என குறியீடு செய்து SHOசீல் வைத்தோம். மீதம் இருந்த 1கிலோ 200 கிராம் கஞ்சாவை P1என குறியீடு செய்து SHO சீல் வைத்து காக்கி கலர் கவரில் வைத்து கட்டினோம். 9.30 மணிக்கு அத்தாட்சியில் காவல் ஆய்வாளர் கையொப்பம் செய்தார். எதிரி-ஜெயராணி, சாட்சிகளான சத்தியப்பிரியாவும், நானும் கையொப்பம் செய்தோம். 9.45 மணிக்கு நானும் எதிரி மற்றும் உடன் வந்த காவலர்கள் மற்றும் சொத்துடன் காவல்நிலையம் வந்தோம். எதிரியை பாரா காவலர் வசம் ஒப்படைத்தோம். ஆய்வாளர் அவர்கள் தெப்பக்குளம் காவல்நிலைய குற்ற எண்.587/2018, ச/பி.8(c)r/w 20(b)(ii)(B) NDPS ACTன் படி வழக்கு பதிவு செய்தார். அதற்கு நானும் என்னுடன் இருந்த காவலர்களும் உதவியாக இருந்தோம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ. 1 ஆகும். அத்தாட்சி அ.சா.ஆ. 2 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.